நம்முடையதேவைக்கும் குறைவான திட்டத்தைத்தான் அவர்கள் தயார் செய்தார்களா ? அதற்கு இந்த அரசினுடைய ரி–ஆக்ஷன் என்ன என்பதை அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போட்டால் விவரமாகப் பதில் தருகிறேன்.

திரு. உ. சுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது ஒகனேக்கல் மின் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு கர்நாடக அரசினுடைய ப்புதல் வேண்டும் என்று சொன்னார்கள். அந்த ஒகனேக்கல் திட்டம் கர்நாடக அரசினுடைய எல்லைக்குள்ளே இருப்பதனால், அவர்களுடைய ஒப்புதல் தேவையா ? அல்லது காவிரி நதி அங்கேயிருந்து உற்பத்தியாவதால் அவர்கள் ஏதாவது தாவா செய்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, கர்நாடகத்தைப் பொறுத்தவரையில் அவர்களுடைய எல்லைக் குள்ளேயே ஒரு திட்டத்தைப் போட்டு, மீதி தண்ணீரை இந்தத் திட்டத்திற்கு தரலாம் என்று சொல்கிறார்கள். ஆனால் இந்த திட்டத்தை ஒட்டுமொத்தமாக நிறைவேற்றினால், இரு மாநிலங்களும் பயன் அடையலாம் என்று மத்திய சர்க்காரும் வற்புறுத்துகிறார்கள், நாமும் சொல்லி வருகிறோம். ஏனென்றால் அந்த ஆற்றின் ஒரு கரை கர்நாடகத்திலும் மற்றொரு கரை தமிழ்நாட்டிலும் இருப்பதால், பாதி வரை அணைக்கட்ட நம்மால் முடியவில்லை.

தன்மாநிலங்களுக்கான தேசிய மின்கிரிட் அமைக்கும் திட்டம்.

*வினா எண். 82—திரு. சு. முத்துக்கிருஷ்ணன்: மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) தென் மாநிலங்களுக்கு ஆன தேசிய மின் கிரிட் அமைக்கும் திட்டம் எந்த அளவில் உள்ளது?

(ஆ) தமிழக அரசு மின் கிரிட் திட்டத்தை ஆதரிக்கிறதா?

(இ) தேசிய மின்கிரிட் திட்டத்தை ஏற்காத தென்மாநிலம் ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) தேசிய மின்கிரிட் அமைப்பதற்கு முன்னோடியாக தென்மண்டலத்தில் மாநிலங் களுக்கு இடையே சில கம்பித் தொடர்கள் ஏற்கனவே அமைக்கப் பட்டுவிட்டன. மற்றும் சில இணைப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

(ஆ) ஆம்.

(இ) இல்லை.

1981 ஆகஸ்ட் 27]

திரு. சு. முத்துக்கிருஷ்ணன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தேசிய மின்கிரிட் திட்டத்திலே புதிதாக மின் இணைப்புகள் ஏற்படுத் கின்ற திட்டத்தைப் பற்றிச் சொன்னார்கள். இந்த மாநிலத்தைப் பொறுத்தவரையில் மின்சாரப் பற்றாக்குறை என்பது இருந்து கொண்டேயிருக் கிறது. 1980–81 ஆம் ஆண்டிலே வெளி மாநிலங்களிலேயிருந்து, அதுவும் குறிப்பாக கேரளா போன்ற மாநிலங்களிலிருந்து நம் அரசு எவ்வளவு மின்சாரத்தைப் பெற்றுள்ள ? தமிழகத்தி னுடைய மின்சாரத் தேவையைப் பூர்த்தி செய்கிற அளவிலே, இந்த அரசு என்னென்ன நடவடிக்கைகளை எடுக்கயிருக்கிறது என்பதையும் அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, தேசிய அளவிலே கிரிட் அமைப்பதைப்பற்றி, அதாவது லைன்கள் அமைப்பதைப் பற்றி மூலக்கேள்வி கேட்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தற்போது மின் உற்பத்தியைப் பற்றியும், மின்சாரம் வெளியிடங்களிலிருந்து வாங்குவது பற்றியும் கேட்கிறார்கள். தனிக் கேள்வி போட்டால் விவரம் சேகரித்துத் தரப்படும்.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, அனைத்திந்திய ரீதியிலான இந்த மின்கிரிட் திட்டத்தினை ஏற்படுத்துவதன் மூலம் தமிழகத்திற்கு தற்போதுள்ள மின் தட்டுப்பாட்டை தடுப்பதற்கு ஏதாவது லாபம் கிடைக்குமா? அல்லது பக்கத்தில் இருக்கும்படியான மாநிலங்களோடு நாம் பேசி ஏற்பாடு செய்து கொண்டு வருகிற மின்சாரம்கூட கிடைப்பதற்கு இடையூறு ஏற்படுமா? ஏனென்றால் இந்தத் திட்டங்கள் அனைத்தும் மத்திய அரசின் கட்டுப்பாட்டின் கீழ் வந்தால், அப்படிப்பட்ட இடையூறு ஏற்படாதா என்பதைப் பற்றி அமைச்சர் அவர் களுடைய கருத்து என்ன என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தைப் பொறுத்த வரையில் தேசிய மின்கிரிட் என்று சொல்கிறபோது அந்த அமைப்பினால் பாதிப்பு ஏற்படும் என்று நான் கருதவில்லை. தென் மாநிலங்களுக்கு இடையே தான் பெரும்பாலும் இந்த மின்சார பரிவர்த்தனைகளை வைத்துக் கொள்கிறோம். ஏனென்றால் அவைகள்தான் நம் அண்டை மாநிலங்கள், ஆந்திரா, கர்நாடகாவை, பொறுத்தவரையில் வேண்டுமானால் அவைகள் வடபுல மாநிலங்களோடு தொடர்பு கொள்ள வேண்டியிருக்கும். ஆகவே நம்மைப் பொறுத்தவரையில் இந்த நான்கு மாநிலங்களிடையேதான் இந்த தேசிய கிரிட் என்பது பயன்படும். இந்த நான்கு மாநிலங்களைப் பார்க்கிறபோது தென்னகத்தில் ஏற்படுகிற மிகப் பெரிய பற்றாக்குறைக்கு முழுமுதல் காரணமாக இருப்பது தமிழகம்தான். மற்ற மாநிலங் களில் இருக்கிற மின்சார உற்பத்தியும் எதிர்காலத்தில் நிறை வேற்ற இருக்கிற மின் உற்பத்தி வாய்ப்புகளும் அதிகம். ஆகவே இந்த தேசிய மின் கிரிட் அமைவதால் அண்டை மாநிலங்களிலிருந்து மின்சாரத்தை நாம் எளிதாக டிரான்ஸ்மிஷன் செய்ய—வாங்குவதற்கு அவர்களோடு பேசித்தான் செய்ய

வேண்டும்—இதற்கு 400 கே. வி. லைன் போட வேண்டும். டிரான்ஸ்மிஷன் செய்து கொள்ள வசதியாக இருக்கும். பெயர் தான் தேசிய கிரிட், நடைமுறையில் அது தமிழ்நாடு கிரிட்டாக இருக்கும்.

(முற்பகல் 9.10

திரு. ப. நெடுமாறன்: இந்தத் தேசிய மின் கிரிட் அமைக்கப் பட இருப்பதை விளக்கி அது தென் மாநிலங்களுக்கு உதவியாக இருக்கும் என்றும் குறிப்பாக தமிழ்நாட்டுக்கு தென் மாநில கிரிட்டிலிருந்து மின்சாரம் எடுத்துக் கொள்ள வசதியாக இருக்கும் என்றும் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இந்த தேசிய மின் கிரிட் அமைக்கிற திட்டம் மத்திய அரசு மின் உற்பத்தியை யும் மின் விநியோகத்தையும் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று அடிக்கடி யோசனை சொல்லிக் கொண்டிருக்கிறதே, அதற்கு முன்னோடியாக இது அமைந்திருக்கிறதா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: நாம் எல்லாம் இங்கே இருக்கிறபோது அவ்வளவு இலேசாக விட்டுவிடமாட்டோம்.

திரு. என். வி. என். சோமு: சென்னை நகரில் பல தெருக் களில் இருக்கிற விளக்குகள் எரியாமல் இருளடைந்து கிடக்கிறது. மாநகராட்சியிடம் சொல்லியும்கூட எந்தவிதப் பயனும் இல்லை. இதற்கு அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: இது உள்ளாட்சித் துறை அமைச்சரிடம் போட வேண்டிய கேள்வி.

திரு. தி. அன்பழகன்: இந்தத் தெரு விளக்குகள் அடிக்கடி ப்யூஸாகி விடுவதால் கூடுமான வரையில் தெரு விளக்கு பல்புகளை குழாய் விளக்குகளாக மாற்றுவதற்கு அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: உள்ளாட்சி மன்றங்களின் தீர்மானங்களின் அடிப்படையில் படிப்படியாக அவைகள் நிறை வேற்றப்பட்டு வருகின்றன.

தெருவிளக்குகளுக்கு வோல்டேஜ் ஸ்டேபிலைசர் பொருத்தும் திட்டம்.

*வினா எண். 83—திரு. வேடசந்தூர் வி.பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா:—

தமிழகத்திலுள்ள தெரு விளக்குகள் பியூஸ் போகாமலிருக்க voltage stabilizer பொருத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன்: இல்லை. எல்லா தெரு விளக்குகளுக்கும் வோல்டேஜ் ஸ்டேபிலைசர் பொருத்துவதற்கு ரூ. 6 கோடிக்கு மேல் செலவு ஆகும். இதற்கு பதிலாக 250 வோல்ட் மின் அழுத்த ஏற்புடைய பல்புகளை வாங்குவதற்கும் மின் கட்டமைப்பில் (கிரிட்)முனைமாற்றிகளை பொருத்துவதற்கும் மின் வாரியம் நடவடிக்கை எடுத்து வருகிறது.